**குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபை – 2017**

---

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த மூன்றுமாதங்களுக்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் பற்றிய கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச்சட்டத்தின் 39 (1) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு 2018 நவம்பர் 12 ஆம் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல்

அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 கூட்டிணைத்தல்

----------------------

2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச்சட்டத்தின் IV ஆம் பாகத்தின் 11 (1) பிரிவின் பிரகாரம் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபை தாபிக்கப்பட்டுள்ளது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 2016 மே 16 திகதிய 1967/8 இலக்க அதிவிசேட வர்த்தமானப்பத்திரிகை மூலம் 2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச்சட்டத்தின் I, II, III, IV, V, VI, VII, VIII மற்றும் IX ஆகிய பாகங்கள் நடைமுறைக்கு வரவேண்டிய திகதியாக 2016 மே 18 ஆம் திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## 1.5 முகாமைச் சபை

------------------------

2015 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச்சட்டத்தின் IV ஆம் பாகத்தின் 12 பிரிவின் பிரகாரம், அதிகாரசபையின் அலுவல்களின் நிருவாகமும் முகாமையும் கீழே குறிப்பிடப்படும் உறுப்பினர்களைக் கொண்ட முகாமைச்சபை ஒன்றிற்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள் -

i. நீதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரான சொல்லப்பட்ட அமைச்சின் மேலதிகச் செயலாளர் ஒருவர்

ii. பொலிசுத் திணைக்களத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரான சொல்லப்பட்ட அமைச்சின் மேலதிகச் செயலாளர் ஒருவர்

iii. மகளிர் விவகாரங்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரான சொல்லப்பட்ட அமைச்சின் மேலதிகச் செயலாளர் ஒருவர்

iv. சிறுவர்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அத்தகைய செயலாளரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரான சொல்லப்பட்ட அமைச்சின் மேலதிகச் செயலாளர் ஒருவர்

v. 1996 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரான அத்தகைய ஆணைக்குழுவின் உறுப்பினரொருவர்

vi. சட்டத்துறைத் தலைமையதிபதியின் நியமத்தர் ஒருவர்

vii. சிரேஷ்ட பிரதிப் பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதி ஒருவரின் பதவி வரிசையை வகிக்கின்றவரான, பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியின் நியமத்தர் ஒருவர்

ஆயின், இப்பந்தியின் (iii) ஆம், (iv) ஆம் உட்பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் ஒரு தனி அமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுமிடத்து அல்லது அவரின் பொறுப்பிலிருக்குமிடத்து, அவ்வமைச்சரின் அமைச்சுச் செயலாளர் மட்டுமே இப்பந்தியின் கீழ் சபையின் உறுப்பினரொருவராக வருவதற்குத் தகவுடையவராதல் வேண்டும்.

(ஆ) குற்றவியல்சார்ந்த, குற்றவியல் நீதி முறைமையுடன், மனித உரிமைகளை மேம்படுத்துதலுடனும் பாதுகாத்தலுடனும் அல்லது மருத்துவத் துறையுடன் இணைந்துள்ள அல்லது சம்பந்தப்பட்டுள்ள உயர்தொழில்களில் அல்லது உயர்தொழிற் செயற்பாட்டுத் துறைகளில் கல்விரீதியில் அல்லது உயர்தொழில்சார்ரீதியில் தகைமை பெற்றவர்களும் அனுபவமுடையவர்களும் எனத் தெரிவுசெய்யப்பட்ட ஆட்களிடையேயிருந்து சனாதிபதியினால் நியமிக்கப்பட்டவர்களான ஐந்து நியமன உறுப்பினர்கள்.

(2) சனாதிபதி, சபையின் உறுப்பினர்களிடையேயிருந்து உறுப்பினர் ஒருவரைச் சபையின் தவிசாளராகப் பெயர்குறித்தல் வேண்டும்; அவரே அதிகாரசபையின் தவிசாளராகவும் இருத்தல் வேண்டும்.

இச்சட்டத்தின் மேற்படி பிரிவுகளின் பிரகாரம், அதிகாரசபையில் 11 முகாமைச் சபை உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

## 1.6 குறிக்கோள்கள் / இலக்குகள்

---------------------------------------

இச்சட்டத்தின் I ஆம் பாகத்தின் 2 பிரிவின் பிரகாரம், இச்சட்டத்தின் குறிக்கோள்களாவன,

(அ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் உரிமைகளையும் உரித்துடைமைகளையும் எடுத்துக்கூறலும், போற்றிக்காத்தலும் மற்றும் வலுவுறுத்துதலும், அத்தகைய உரிமைகளையும் உரித்துடைமைகளையும் மேம்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும், வலுவுறுத்துவதற்கும் மற்றும் பிரயோகிப்பதற்குமான அமைப்புமுறையொன்றை ஏற்பாடுசெய்தலும்;

(ஆ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்கும் உதவியும் பாதுகாப்பும் வழங்குதல்.

(இ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோர், அவர்களுக்கெதிராகத் தவறுகள் புரியப்பட்டமைக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட ஆட்களிடமிருந்து நட்டஈடு பெறுவதனை இயலச்செய்தல்.

(ஈ) மீட்டளிப்பு, நட்டஈடு, இழப்புக்கான எதிரீடு மற்றும் புனர்வாழ்வு என்பனவுட்பட, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோர் நிவர்த்தி பெறுவதற்கு ஏற்பாடு செய்தல்.

(உ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் உரிமைகளையும் உரித்துடைமைகளையும் மேம்படுத்தும் மற்றும் பாதுகாக்கும் முகமாக அரச, நீதிமுறை

அலுவலர்களினதும் பகிரங்க அலுவலர்களினதும் கடமைகளையும் பொறுப்புடைமைகளையும் எடுத்துக்கூறுதல்;

(ஊ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்கும் எதிராகப் புரியப்படக்கூடிய தவறுகளையும் மற்றும் அத்தகைய தவறுகளைப் புரிகின்ற ஆட்களின்மீது விதிக்கப்படக்கூடிய தண்டனை வலுவளித்தல்களையும் விதித்தல் அத்துடன்;

(எ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புத் தொடர்பாக மிகச் சிறந்த செயல்முறைகளைக் கடைப்பிடித்தலும் செயற்படுத்துதலும்.

இச்சட்டத்தின் IV ஆம் பாகத்தின் 13(1) பிரிவின் பிரகாரம், அதிகாரசபையின் கடமைகளும் பணிகளும் :-

(அ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களின் உரிமைகளினதும், உரித்துடைமைகளினதும் ஏற்றங்கீகாரத்தையும் மற்றும் அவற்றிற்கு மதிப்பளித்தலையும் ஊக்குவித்தலும்;

(ஆ) சாட்சிகளினது உரித்துடமைகளின் ஏற்றங்கீகாரத்தையும் மற்றும் அவற்றிற்கு மதிப்பளித்தலையும் ஊக்குவித்தலும்;

(இ) குற்றச்செயல்களுக்குப்பலியாக்கப்பட்டவர்களின் உரிமைகளையும் மற்றும்சாட்சிகளின் உரித்துடைமைகளையும் பாதுகாத்தலும் அல்லது பாதுகாக்கச்செய்வித்தலும்;

(ஈ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவரின் அல்லது சாட்சியொருவரின் ஏதேனும் உரிமையின் அல்லது உரித்துடைமையின் சார்த்தப்பட்ட மீறுதலொன்று தொடர்பில் அல்லது ஏதேனும் தகவல் கிடைக்கப்பெற்றதன் மீது, அத்தகைய சார்த்தப்பட்ட மீறுதலையிட்டு அல்லது உடனடியாக நிகழவிருக்கின்ற மீறுதலையிட்டு புலனாய்வு செய்தலும் விசாரணை செய்தலும் மற்றும் இச்சட்டத்தினால் ஏற்பாடுசெய்யப்பட்ட குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் உரிமைகளி னதும் உரித்துடைமைகளினதும் பாதுகாப்பையும் மற்றும் மேம்பாட்டையும் உறுதிப்படுத்துவதற்காக அது தொடர்பில் தோதான திருத்த வழிமுறைகளை எடுக்கும்படி ஏதேனும் இயைபான அதிகாரசபையைத் தேவைப்படுத்தலும்;

(உ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் அவசியமான சிகிச்சை, மீட்டளிப்பு, இழப்புக்கான எதிரீடு அத்துடன் புனர்வாழ்வு என்பவற்றிற்கான வழிமுறைகள் உட்பட, அவசியமான உதவியை வழங்குதலும்;

(ஊ) இச்சட்டத்தின் 29 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் நிதியத்திலிருந்து குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குவதற்கான அளிப்பொன்றை ஆக்குதலும் மற்றும் அந்த நோக்கத்திற்கென செயற்றிட்டம் ஒன்றை அபிவிருத்தி செய்தலும் மற்றும் நடைமுறைப்படுத்துதலும்;

(எ) இச்சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் உரிமைகளும் உரித்துடைமைகளும் தொடர்பாக பொதுமக்களிடையே விழிப்புணர்ச்சியை உருவாக்குதல்;

(ஏ) குறிப்பாக குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் -

i. பயனுறுதியுள்ள பாதுகாப்பையும்;
ii. அவசியமான சிகிச்சையையும் புனர்வாழ்வையும் ஆலோசனையையும்; அத்துடன்
iii. ஏனைய வேறு உதவியையும்,

வழங்குதல் தொடர்பாக கடைப்பிடிக்கப்பட வேண்டிய அல்லது நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய பொருத்தமானவையும் குறிக்கப்பட்டவையுமான வழிமுறைகள் பற்றி இலங்கைப் பொலிசுத் திணைக்களத்திற்கும், நியதிச்சட்ட நிறுவனத்திற்கும் மற்றும் பகிரங்க அலுவலர்களுக்கும், மதியுரை வழங்குதலும் விதப்புரைகளைச் செய்தலும்;

(ஐ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் உரிமைகளினதும் உரித்துடைமைகளினதும் மேம்பாடு மற்றும் பாதுகாப்புத் தொடர்பாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட நியமங்களுக்கும் மிகச் சிறந்த செயல்முறைகளுக்கும் இசைந்திருப்பதை உறுதிப்படுத்துவதற்காக உளதான கொள்கைகளையும், சட்டவாக்கங்களையும் மற்றும் பல்வேறு அதிகாரசபைகளினால் கடைப்பிடிக்கப்படுவனவும் பின்பற்றப்படுவனவுமான செயல்முறைகளையும் நடவடிக்கை முறைகளையும் மீளாய்வு செய்தலும் மற்றும் அத்தகைய மீளாய்வின் அடிப்படையில், பொருத்தமான கொள்கைகள், சட்டவாக்கங்கள், செயல்முறைகள் என்பவற்றின் கடைப்பிடிப்பு, திருத்தம் அத்துடன் பிரயோகம் தொடர்பாக விதப்புரைகளைச் செய்தல்;

(ஒ) ஏதேனும் நீதிமன்றத்தின் அல்லது ஆணைக்குழுவின் அல்லது வேறு எவரேனும் ஆள் ஒருவரின் வேண்டுகோளின் பேரில், சமகால அல்லது சமகாலத்தை அண்மித்ததான கட்புல -செவிப்புல இணைப்புக்கள்மூலமான சான்றுகளின் பெறுகையுடன் சம்பந்தப்பட்டனவான மிகச்சிறந்த செயல்முறைகள் பற்றிய தகவல்களை கிடைக்க செய்வித்தல்;

(ஓ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் வயது, பால், மதம், மொழி, கலாசார நம்பிக்கைகளும் செயல்முறைகளும், இன அல்லது சமூகப்பூர்வாங்கங்கள் அல்லது இயலாமைகள் அல்லது வேறு ஏதேனும் காரணம் என்பவற்றால் ஏற்படுத்தப்பட்ட ஊறின் அல்லது ஏற்படுத்தப்படக்கூடிய சாத்தியமுள்ள ஊறின் விளைவாக எழுகின்ற, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் தேவைகள் பற்றி அல்லது குறிப்பிட்ட வகுதிகளைச் சேர்ந்த குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களின் எவையேனும் விசேட தேவைகள் பற்றி, இலங்கைப் பொலிசு அலுவலர்கள், மறியற்சாலைகள் திணைக்களத்தின் அலுவலர்கள், அரசாங்க மருத்துவ அலுவலர்கள், நன்னடத்தை மற்றும் சமூக சேவைகளுடன் தொடர்புடைய பகிரங்க அலுவலர்கள் ஆகியோர் உட்பட, சட்டத்தை வலுவுக்கிடுதலில் ஈடுபட்டுள்ள பகிரங்க அலுவலர்களைக் கூர்ந்தறியும் திறன்கொண்டவர்களாகச் செய்வதற்கான வழிமுறைகளை எடுத்தல்;

(ஔ) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களின் உரிமைகளினதும் மற்றும் சாட்சிகளினது உரித்துடைமைகளினதும் பாதுகாப்பு தொடர்பாக இலங்கைப் பொலிசு அலுவலர்கள், மறியற்சாலைகள் திணைக்கள அலுவலர்கள், அரசாங்க மருத்துவ அலுவலர்கள் அத்துடன் அரசாங்க சமூக சேவை நிறுவனங்களின் அலுவலர்கள் ஆகியோர் உட்பட சட்டத்தை வலுவுக்கிடுதலில் ஈடுபட்டுள்ள நீதிமன்றங்களாலும் ஆணைக்குழுக்களாலும், வேறு எவையேனும் நியாய சபைகளாலும், பகிரங்க அலுவலர்களாலும் மற்றும் நியதிச்சட்ட குழுக்களின் அலுவலர்களாலும் நடத்தைக்கோவைகளும் ஏற்றங்கீகரிக்கப்பட்ட மரபுகளும் மிகச்சிறந்த செயல்முறைகளும் அனுசரிக்கப்படுவதையும் பிரயோகிக்கப்படுவதையும் மேம்படுத்துதல் மற்றும் பரிந்துரை செய்தல்;

(க) (i) குற்றச்செயல் சம்பவங்களை குறைக்கக்கூடிய;

(ii) பலியாக்கப்பட்டவர்கள்மீது குறிக்கப்பட்ட குற்றச்செயல்களின் தாக்கம் குறைக்கக்கூடிய அல்லது தடுக்கக்கூடிய;

(iii) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவா;களுக்குப் பயனுறுதியுடன் சிகிச்சையளிக்கக்கூடிய, புனர்வாழ்வளிக்கக்கூடிய, ஆலோசனை வழங்கக்கூடிய உதவியளிக்கக்கூடிய, நட்டஈடு வழங்கக்கூடிய அத்துடன் பாதுகாக்கக்கூடிய;

(iv) சாட்சிகள் சட்ட வலுவுறுத்தல் அதிகாரிகளுக்கு முன்னர் வாக்குமூலங்களை அளிப்பதற்கு அல்லது நீதிமன்றங்களின் முன்னிலையிலும் அத்துடன் எவையேனும் ஆணைக்குழுக்களினதும் வேறு நியாயசபைகளினதும் முன்னிலையிலும் வழக்கு நடவடிக்கைகளில் அச்சமின்றி சாட்சியம் அளிப்பதற்கு உகந்ததான சூழலை உருவாக்கக்கூடிய,

(v) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் உதவியும் பாதுகாப்பும் வழங்கக்கூடிய,

வழிமுறைகள் தொடர்பில் ஆராய்ச்சி நடாத்துதல் அல்லது ஆராய்ச்சி நடாத்தப்படுவதை ஊக்குவித்தல்;

(ங) குற்றச்செயல் சம்பவங்களைக் குறைப்பதற்கும் மற்றும் குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் உதவியும் பாதுகாப்பும் வழங்கப்படுவதற்கு வசதியளிக்கப்படுவதற்கு இயைபான அரசாங்க நிறுவனங்களால் கடைப்பிடிக்கப்படக்கூடிய சமூக, சுகாதார, கல்வி, பொருளாதார மற்றும் குற்றத் தடுப்புக்கொள்கைகள் தொடர்பில் விதந்துரைத்தல்;

(ச) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களுக்குக் குற்றவியல் நீதிமுறைமையில் தண்டனைத் தீர்ப்பு விருப்புத் தெரிவொன்றாக மீட்டளிப்பு வழிமுறைகள் அபிவிருத்தி செய்யப்படுதல் கடைப்பிடிக்கப்படுதல் மற்றும் நடைமுறைப்படுத்தப்படுதல் தொடர்பில் விதந்துரைத்தல்;

(ஞ) குற்றவியல் நீதி நிர்வாக முறையொன்றாகவும் குற்றவியல் நீதி முறைமையில் தண்டனைத் தீர்ப்பளிக்கும் விருப்பத் தெரிவொன்றாகவும் மீளளிக்கும் நீதி வழிமுறைகள் அபிவிருத்தி செய்யப்படுதல் கடைப்பிடிக்கப்படுதல் மற்றும் நடைமுறைப்படுத்தப்படுதல் தொடர்பில் விதந்துரைத்தல்;

(ட) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களுக்கும் சாட்சிகளுக்கும் உதவியும் பாதுகாப்பும் வழங்குவதற்கான செயற்றிட்டம் ஒன்றை அபிவிருத்திசெய்தலும், கடைப்பிடித்தலும் மற்றும் நடைமுறைப்படுத்துதலும்;

(ண) குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டவர்களினதும் சாட்சிகளினதும் உதவி மற்றும் பாதுகாப்புப் பிரிவைத் தாபித்தல் மற்றும் பேணுதல் தொடர்பில் வழிகாட்டு நெறிகளை வழங்குதலும்;

(த) (i) அதிகாரசபை இச்சட்டத்தின் குறிக்கோள்களுக்குப் பயனளித்துள்ள முறை;

(ii) அதிகாரசபையின் கடமைகளும், பணிகளும் புரியவும் நிறைவேற்றவும் பட்டமை ; அத்துடன்

(iii) அவசியமான கொள்கை மற்றும் சட்டவாக்கச் சீர்திருத்தங்கள்,

என்பன பற்றிய அறிக்கையொன்றை ஆண்டுதோறும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்;

(ந) இச்சட்டத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான எவையேனும் மேலதிகப் பணிகளையும் செயற்பாடுகளையும் செய்தல் அல்லது புரிதல்.

**1.7 இயங்குதல்**

அதிகாரசபையின் செயற்பாடு 2016.01.08 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டதுடன் கொடுக்கல்வாங்கல்கள் பொருட்டு 2017.09.20 ஆம் திகதியிலும் 2017.10.10 ஆம் திகதியிலும் வங்கிக் கணக்குகள் அரச வங்கியொன்றில் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

**2. நிதிக் கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோரினதும் சாட்சிகளினதும் பாதுகாப்புக்கான தேசிய அதிகாரசபையின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த 3 மாதங்களுக்கான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த காலப்பகுதிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் மாதத்துக்குரிய ரூபா 24,078 தொலைபேசிச் செலவு அட்டுறு அடிப்படையில் கணக்குகளில் பதியப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவனத்தின் கணக்குகள் காலப்பகுதியானது 2017 ஒற்றோபர் 01 ஆம் திகதி தொடக்கம் ஆனபோதிலும் கணக்குகள் காலப்பகுதிக்கு ஏற்புடையதாகாத 2017 செத்தெம்பர் மாதத்தில் உறப்பட்ட ரூபா 11,859 ஆன தொலைபேசிப் பட்டியல் செலவு காலப்பகுதியின் செலவொன்றாக கணக்குகளில் பதியப்பட்டிருந்தது.

(இ) ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் மீளாய்வு காலப்பகுதியில் கிடைத்திருந்த ரூபா 21,660,500 நிதியை புத்தகத்திலும் இயைபான வருமானக் கணக்கிலும் பதியாமல் நேரடியாக வங்கியில் வைப்புச்செய்யப்பட்டிருந்தது.

**2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

2017 ஆம் ஆண்டு பொருட்டு அரசின் மீண்டுவரும் மானியமாக ரூபா 5,462,000 நிதி அமைச்சினால் வழங்கப்பட்ட போதிலும் அத்தொகை நிதிக் கூற்றுக்களின்படி ரூபா 5,123,226 ஆக பதியப்பட்டிருந்தமையினால் ரூபா 338,774 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

கீழே காணப்படும் சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவையினது நிதி ஒழுங்குவிதி 625 மற்றும் 1994 ஏப்ரல் 20 ஆம் திகதிய அரச கணக்குகள் சுற்றறிக்கை 30/94 இல் பந்தி 5 | யுஎன்டிபி நிகழ்ச்சித்திட்டத்தினால் அதிகாரசபையின் வங்கி நடைமுறைக் கணக்கிற்கு நேரடியாக வரவு வைக்கப்பட்டிருந்த ரூபா 21,660,500 தொகை சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்குகளில் பதியப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) நிதி ஒழுங்குவிதி 753 (2) | நீதி அமைச்சினால் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 2,729,531 பெறுமதியான நிலையான சொத்துக்கள் கிடைத்தமை பொருட்டான பெறுவனவு கட்டளைகள் நிறுவனத்தினால் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

**3. நிதிசார் மீளாய்வு**

**நிதிசார் விளைவுகள்**

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிற்கான அதிகாரசபையின் மொத்த வருமானம் ரூபா 5,191,464 ஆக இருந்ததுடன் மொத்த செலவினமும் ரூபா 5,191,464 விளைவித்திருந்தமையால் நிதிசார் விளைவு பூச்சிய பெறுமானமொன்றை பெற்றிருந்தது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 பதவியினர் நிர்வாகம்**

நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியினர் எண்ணிக்கை 54 ஆக இருந்தபோதிலும் 2017 திசெம்பர் 31 ஆம் திகதியளவில் நிறுவனத்தின் உள்ளபடியான பதவிகளின் எண்ணிக்கை 27 ஆக இருந்தது. நிறுவனத்தின் பணிகளை நிறைவேற்றுவதில் நேரடியாக தாக்கம் செலுத்தும் 20 பதவிகள்(உ-மாக, சட்ட அலுவலர்கள் - 02, புலனாய்வு அலுவலர்கள் - 06, மொழிபெயர்ப்பாளர் - 01, தகவல் அலுவலர் - 01, பாதுகாப்பு அலுவலர்கள் - 10) 2017 திசெம்பர் 31 ஆம் திகதியன்று தொடர்ந்து வெற்றிடமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் பந்தி 6.5.1 பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு ஆண்டறிக்கை என்பன நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களினுள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியபோதிலும், மீளாய்வு காலப்பகுதிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மே 11 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

அதிகாரசபையானது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்றை தாபித்திருக்கவில்லை என்பதுடன் நீதி அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவும் மீளாய்வு காலப்பகுதிற்கு ஏற்புடைய உள்ளகக் கணக்காய்வினை செய்திருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாடுகளும் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | நிறுவனம் பேரேட்டுக் கணக்குகளை பேணுகையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மாதிரி (வரவு செலவு என்றவாறு) பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) முற்பணக் கொடுப்பனவு | முற்பணங்கள் அலுவலர்களுக்கு வழங்கப்படும்போதும் கொடுத்துதீர்க்கப்படும்போதும் பிரத்தியேகமான முற்பணக் கணக்கொன்று பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |